பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 01 புதன்கிழமை 17.11.2021 கதிர் 240

## வடக்கில் கனமழை பெய்யும்!

வட மாகாணம் மற்றும் புத்தளம், அநுராதபுரம், திருகோணமலை மாவட்டங்களுக்கு விசேட வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ☞2

# தொற்று அதிகரித்தால் மீள பயணக்கட்டுப்பாடு!

### எச்சரிக்கின்றார் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம்



கொழும்பு,நவம்பர்17

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், எதிர்காலத்தில் நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்நிலை தொடர்ந்தால் மீண்டும் போக்குவரத்து ☞2

# பாரதீய ஜனதாக் கட்சியைச் சமாளிக்க இலங்கை இந்துத்வா இராஜதந்திரத்தை கையிலெடுக்கிறது

### நாடாளுமன்றில் கோட்டா அரசை போட்டுத் தாக்கினார் சித்தர்



கொழும்பு,நவ.17

இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியைத் (பி.ஜே.பியைத்) திருப்திப்படுத்துவதற்காக இந்துத்வா இராஜதந்திரத்தை கையிலெடுக்கிறது இலங்கை அரசாங்கம். அதற்காகவே பல்வேறு நாடகங்கள் அரங்கேறி வருகின்றன எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அரசாங்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதானவிவாதத்தில்உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

இன்று இந்த - பௌத்த நல்லுறவு பற்றி பேசுகின்றீர்கள். பாரத பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் மிகவும் பலமான நிலையிலுள்ள பாரதீய ஜனதாக் கட்சியைத் திருப்திப்படுத்துவதற்கு - இந்துத்வா கருத்தியலுக்கு நெருக்க ☞2

# யாப்பில் இருப்பதை நிறைவேற்றுங்கள்; 13 இல் பறித்தவற்றை மீள வழங்குங்கள்!

### நாடாளுமன்றத்தில் சித்தார்த்தன் வலியுறுத்தல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.17

அரசியல் யாப்பில் இருப்பவற்றை நிறைவேற்றுங்கள். 13 இலிருந்து பறிக்கப்பட்ட விடயங்களை மீளவும் தமிழ் மக்களுக்கு வழங்குங்கள் என தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு எம்.பியும் புளொட் தலைவருமான த.சித்தார்த்தன் வலியுறுத்தினார்.

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல் யாப்பிலுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை ☞2

# வல்வெட்டித்துறை நகரசபையில் வரவு – செலவுத் திட்டம் தோல்வி!

வல்வெட்டித்துறை நகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று ஒரு வாக்கினால் தோற்கடிக்கப்பட்டது.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு அதிகாரத்தை கைப்பற்றிய சுயேச்சைக் குழுவின் தலைவர் செல்வேந்திரா இன்று புதன்கிழமை ☞2

# நாம் நாசமாகிப் போனாலும் கூட நாணய நிதியத்திடம் போகோம்!

### அமைச்சர் வாசு திட்டவட்ட அறிவிப்பு

அரசாங்கம் நாசமாகிப் போனாலும் கூட ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று மக்களை நாசமாக்க இடமளிக்க மாட்டோம் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். ☞8

# யாழ். மாநகர ஆணையருக்கு தொற்று!

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆணையாளர் த.ஜெயசீலனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இது அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனை அடுத்து மாநகர சபை ஊழியர்கள் மேலும் 15 பேருக்கு கொரோனாத் தொற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரியவந்தது.

# பரந்தனில் இன்று அதிகாலை ஒருவர் வெட்டிப் படுகொலை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.17

பரந்தன் சிவபுரம் பகுதியில் இன்று அதிகாலை 27வயது குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். ☞2



# மாதகலில் காணி சுவீகரிப்புக்கான அளவீட்டு நடவடிக்கை முறியடிப்பு

(கலையமுதன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்.மாதகல் பகுதியில் கடற்படையினரின் தேவைக்குத் தனியார் காணிகளை சுவீகரிக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட இருந்த காணி அளவீட்டு நடவடிக்கை மக்களின் எதிர்ப்பால் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பாரதீய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மானவர்களாக உங்களைக் காண்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றீர்கள்.

இந்தியாவிற்கான இலங்கைத்தூதுவர் மிலிந்த மொறகொட கண்டியிலுள்ள சீதை அம்மன் ஆலயத்திலுள்ள கல்லை ராமர் கோவில் கட்டுவதற்கு கொண்டு போகின்றார். இறைச்சிக்காக மாடு அறுப்பதை தடுப்பது பற்றிய சட்ட மூலத்தைக்கொண்டு வருகின்றீர்கள். அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட பகவத்கீதையின் பிரதியை பிரதமர் மோடிக்கு பரிசளிக்கின்றார்.

இதன்மூலம் நீங்கள் கூறவருவது தெளிவாகவே புரிகின்றது. பி.ஜே.பியை திருப்திப்படுத்துவதற்காக இந்துத்வா இராஜதந்திரத்தை கையிலெடுத்திருக்கின்றீர்கள். இந்து - பௌத்த ஒற்றுமை பற்றி பேசுகின்றீர்கள். ஆனால் மறுபுறும் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் இந்து தமிழ் மக்களின் சமத்துவம், கௌரவத்தை உறுதிப்படுத்துவதை எதிர்க்கின்றீர்கள்.

பாரம்பரிய இந்து ஆலயங்களை பௌத்த விகாரைகளாக பிரகடனப்படுத்துகிறீர்கள். அந்த இடங்களை பௌத்த பிக்குகள் ஆக்கிரமிப்பதற்கு உங்கள் படைகள் உதவுகின்றன. இன்று பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கியிருக்கின்றீர்கள். ஆனால் இந்து மதத்தினதோ அல்லது இலங்கையில் உள்ள ஏனைய மதங்களினதோ வளர்ச்சிக்கு நிதியொதுக்கவில்லை.

இங்கும் உங்களுடைய உள்நோக்கம் வேறு என்பதை நாமறிவோம். இந்துத்வா கருத்தியலுக்கு நெருக்கமானவர்களாக உங்களை காண்பித்துக்கொண்டு இந்தியாவின் ஆதரவுடன் 13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாமல் ஆக்கலாம் என்று எண்ணுகின்றீர்கள்.

13 ஆவது திருத்தத்தை தூக்கிவிட்டு தமிழ் மக்களுக்கு இலங்கையின் அதிகாரத்தில் எந்தவொரு பங்கினையும் வழங்க முடியாதென்று கூற முற்படுகின்றீர்கள்.

அதாவது இந்தியாவின் இந்து மக்களை பயன்படுத்தியே வட கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் இந்துக்களை அதிகாரமற்றவர்களாக்கலாம் என்று கணக்குப் போடுகின்றீர்கள்.

இவ்வளவு அனுபவங்களுக்கு பின்னரும்கூட தமிழ் மக்களை எவ்வாறு மேலும் ஒன்றுமில்லாதவர்களாக்கலாம் என்றே சிந்திக்கின்றீர்கள்.

காலம் சென்ற பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க 1973 இல் கூறிய ஒரு விடயத்தை இப்போது நினைவுபடுத்துவது மிகவும் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கின்றேன். 'நாடு எரிமலையின் மீது அமர்ந்திருக்கின்றது அது எந்த நேரத்திலும் வெடித்து சிதறலாம்' என்றார்

அன்று சிறிமாவோ அம்மையார் கூறியது இப்போதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கின்றது. அந்தளவிற்கு நாடு அதலபாதாளத்தை நோக்கி சரிந்து கொண்டிருக்கின்றது. உண்மையில் இந்த நாடு எந்த நிலையிலிருக்கின்றது?

பஞ்சத்தில் மக்கள் சாக நேரிடுமோ என்று அஞ்சுமளவிற்கு பொருள் தட்டுப்பாடு,ஏழை மக்களால் சமாளிக்கவே முடியாதளவிற்கு விலைவாசி உயர்வு, அந்நியச் செலாவணி கையிருப்பில் ஏற்பட்டிருக்கும் மோசமான வீழ்ச்சி, மோசமான நிதி நெருக்கடியென நாட்டின் பொருளாதார நிலை வங்குரோத்து நிலையை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றது. இலங்கையின் வரலாற்றில் இது போன்றதொரு நெருக்கடி இதற்கு முன்னர் ஒரு போதுமே ஏற்பட்டதில்லை.

இதற்கு காரணம் என்னவென கேட்டால் கொரோனா வைரஸ் தொற்றை காரணம் காட்டுவார்கள். ஆனால் இன்றைய பெரும் நெருக்கடிக்கு கொரோனா வைரஸ் தொற்று மட்டுமே காரணமா என்ற நேர்மையான கேள்வியை நாம் கேட்கின்றோம்.

கொரோனாத் தொற்று உலகளாவிய நெருக்கடி என்பது ஒரு காரணம் மட்டுமே, பல நாடுகள் இந்த நெருக்கடி நிலையை வெற்றிகரமாக கையாண்டு வருகின்றன. அரசாங்கத்தின் திறமையும் அதில் சார்ந்தே உள்ளது.

இந்தப் பொருளாதார நெருக்கடி திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல, இது வெகுகால புற்றுநோய். இப்போது மறைக்க முடியாத அளவிற்கு நோய் முற்றிவிட்டது.

இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைகளை தீர்க்கவோ, நியாயமான கோரிக்கையை கருத்தில் கொள்ளவோ இல்லை. மாறாக தமிழர் மீதான கட்டவிழ்த்த அடக்குமுறையைக் கையாண்டீர்கள். இதற்கு ஆட்சியை முன்னெடுத்த இரண்டு கட்சிகளும் பொறுப்பாகும்.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் புறக்கணிப்பட்ட காரணத்தினால்தான் இந்த நாடு ஓர் உள்நாட்டு யுத்தத்திற்குள் சிக்கியது. நாட்டின் ஒட்டுமொத்த வளமும் யுத்தவெற்றியில் முதலீடு செய்யப்பட்டது. யுத்த வெற்றிக்காக பல நாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலையேற்பட்டது.

இதனால்தான் நாடு பெரும் கடன் சுமைக்குள் சிக்கியது. அத்துடன் பொருளாதார வளர்ச்சியில் பாரிய பின்னடைவைக் கண்டது. நீங்கள் விரும்பிய யுத்த வெற்றிக்காக முழு நாட்டையும் அடகுவைக்க நீங்கள் தயங்கவில்லை. இதன் காரணமாகத்தான் இந்த நாடு இன்று வல்லரசுகளின் அதிகார போட்டிக்குள் சிக்கியிருக்கின்றது.

நீங்கள் விரும்பிய யுத்த வெற்றி உங்களுக்கு கிடைத்துவிட்டது. ஆனால் உங்களால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியவில்லை. பொருளாதார ரீதியில் கையேந்தாத இலங்கைச் சமூகமொன்றை உருவாக்குவதில் உங்களால் வெற்றிபெற முடிந்ததா? இந்த நாடு எதிர்கொண்டிருக்கும் வரலாற்று நெருக்கடிக்கான உண்மையான காரணத்தை இந்த பின்னணியில்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் எத்தனையோ வாய்ப்புக்கள் கிடைத்த போதிலும் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளை தீர்க்க முயற்சிக்கவில்லை.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் ஆரம்பத்திலேயே பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் இந்த நாடு யுத்தத்தை நோக்கி சென்றிருக்காது. நாட்டின் வளமும் சிதைந்திருக்காது. நாடு கையேந்தும் நிலைக்கும் சென்றிருக்காது. இவ்வாறானதொரு வரலாற்று நெருக்கடிக்கு நாட்டு மக்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்காது.

தமிழ் மக்களை எப்போதுமே இரண்டாம் தர பிரஜைகளாக வைத்திருக்க வேண்டுமென்னும் உங்கள் தீராத ஆசையினால் நீங்கள் சாதித்தது என்ன? சிங்கள இளைஞர், யுவதிகள் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி செல்வதற்காக வரிசையில் நிற்கின்றனர்.

ஒரு காலத்தில் இராணுவ கெடுபிடிகளாலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் அச்சுறுத்தலாலும் எமது இளைஞர் யுவதிகள் நாட்டைவிட்டு வெளியேறினர். அவ்வாறானவர்கள்தான் இன்று புலம்பெயர் சமூகமாக வளர்ச்சியுற்றிருக்கின்றனர். இன்று பொருளாதார நெருக்கடியை தாங்கிக் கொள்ள முடியாமல் சிங்கள - இளைஞர் யுவதிகள் நாட்டை விட்டு வெளியேறும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. - என்றார்.

## வடக்கில் கனமழை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று பிற்பகல் 01 மணி முதல் நாளை பிற்பகல் 01 மணி வரையான காலப்பகுதிக்கு இந்த எச்சரிக்கை அமுலில் இருக்கும்.

இக்காலப்பகுதியில் மேற்குறித்த பகுதி மக்கள் அவதானத்துடன், இருக்குமாறு வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மத்திய வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு நோக்கி நகர்ந்து, தெற்கு ஆந்திரா மற்றும் அதை ஒட்டிய வட தமிழக கடற்கரையை நாளை 18 ஆம் திகதி அடைய வாய்ப்புள்ளது.

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக வட மாகாணத்தின் சில இடங்களிலும் புத்தளம், அநுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வானிலை ஆய்வு மையம் இன்று வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொற்று அதிகரித்தால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலை ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை நேற்று 552,994 ஆகவும், மொத்த உயிரிழப்புகள் 14,034 ஆகவும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கொவிட் செயலூக்கியாக (பூஸ்டர்) பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணி இன்று மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அனுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டது.

## யாப்பில் இருப்பதை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று வரையில் நீங்கள் முழுமையாக அமுல்படுத்தவில்லை. அரசியல் யாப்பை மீறுவதில் நீயா? - நானா? என்று போட்டிபோடுகின்றீர்கள்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த மறுப்பதானது அரசியல் யாப்பை அப்பட்டமாக மீறும் ஒரு செயலாகும். இதனை உணர முடியாதளவிற்கு எதேச்சதிகாரம் உங்களின் கண்களை மறைத்திருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதியும் இப்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ '13 பிளஸ்' தொடர்பில் பேசினார். இந்தியாவிற்கும் சர்வதேசத்திற்கும் அவ்வாறான வாக்குறுதியை வழங்கியிருந்தார்.

2009இல் யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, இலங்கைக்கு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துடன் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில், 13இற்கு அப்பால் சென்று தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பார் என மஹிந்த வாக்குறுதியளித்திருந்தார்.

அந்த வாக்குறுதிக்கு என்ன நடந்தது? இப்போது மீண்டும் உள்ளகப் பொறிமுறை தொடர்பில் பேசுகின்றீர்கள். புலம்பெயர் சமூகத்துடன் பேசவுள்ளர் என ஜனாதிபதி கூறியிருக்கின்றார். அரசியல் யாப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தையே முழுமையாக அமுல்படுத்த மறுத்துவரும், உங்களின் உள்ளக பொறிமுறையை சித்தசுவாதீனமுள்ள எவராவது நம்புவரா?

இந்த அரசாங்கத்தால் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியுமென்பதில் எந்தவொரு நம்பிக்கையும் என்னிடமில்லை. ஏனெனில், நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு காரியத்தையும் நீங்கள் செயலில் காண்பிக்கவில்லை.

உண்மையில், நீங்கள் கூறும் புதிய அரசியல் யாப்பானது - ஒற்றையாட்சி முறைமை நீக்கப்பட்ட - தமிழ் மக்களின் சமத்துவம் கௌரவத்தை உறுதிப்படுத்தும் அரசியல் ஏற்பாடுகளை கொண்டிருக்கின்ற - முக்கியமாக, அவற்றை நாடாளுமன்ற பெரும்பான்மையின் ஊடாக மீளவும் பறித்தெடுக்க முடியாத ஏற்பாடுகளை கொண்டிருக்குமானால் - அப்படியானதோர் அரசியல் யாப்பை நாம் இரு கரம்கூப்பி வரவேற்போம்.

ஆனால், நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயங்களை உற்றுநோக்கினால், அரசாங்கத்திடம் அப்படியான எந்தவொரு நோக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை.

மாகாண சபைகள் செயலற்றிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாகாண நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகள், மருத்துவமனைகளை திட்டமிட்டு மத்திய அரசின் கீழ் கொண்டு செல்கின்றீர்கள்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூட இப்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை நீர்த்துப் போகச்செய்யும் ஓர் இரகசிய படையணியாக தொழிற்படுகின்றதோ என்னும் சந்தேகம் எழுந்திருக்கின்றது எனத் தெரிவித்தார்.

## வல்வெட்டித்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலை நடைபெற்ற சபைக் கூட்டத்தில் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். இதனை வாக்கெடுப்புக்கு விட்டபோது அதிகாரத்திலுள்ள சுயேச்சைக் குழுவுக்கு ஆதரவாக எட்டு வாக்குகளும் எதிர்க்கட்சி அணிகளுக்கு ஒன்பது வாக்குகளும் கிடைத்தன.

இதனால் சுயேச்சை குழு தோல்வியடைந்தது. சபையின் முன்னாள் தலைவர் கோ.கருணானந்தராசா கொரோனாத் தொற்றால் மரணம் அடைந்தமையை அடுத்து இடம்பெற்ற தலைவர் தெரிவுக்கான தேர்வில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் சதீஸைத் தோற்கடித்து சுயேச்சைக் குழுவின் தலைவர் செல்வேந்திரா தலைவரானார். இத்தேர்தலில் தமிழரசுக் கட்சி உறுப்பினரும் சபையின் உப தலைவருமான கேசவன், சுயேச்சைக் குழுவுக்கு ஆதரவாக நின்றமையால் முன்னர் சுயேச்சைக் குழு அதிகாரத்தைக் கைப்பற்றியது.

சுயேச்சைக் குழுவுக்கு முன்னர் ஆதரவளித்த தமிழரசுக் கட்சி உறுப்பினர் கேசவன், இன்று நடைபெற்ற வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது எதிர்த்து வாக்களித்தமையால் சுயேச்சை குழு தோல்வியடைந்துள்ளது.

எனினும் அடுத்த இரண்டு வாரத்துக்குள் மீண்டும் ஒரு தடவை மாற்றத்துடன் தமது வரவு - செலவுத் திட்டத்தை தலைவர் செல்வேந்திரா சமர்ப்பிக்க முடியும். அதிலும் அது தோற்கடிக்கப்படுமானால் அவர் தமது பதவியை இழப்பார். மீண்டும் புதிய தலைவர் தேர்வு இடம் பெறும்.

## பரந்தனில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முத்தையா கேதீஸ்வரன் என்னும் குடும்பஸ்தரே இவ்வாறு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இன்று அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் உடலம் வீட்டில் காணப்பட்டுள்ளது.

இனம் தெரியாத சிலர் அதிகாலை 12 மணி தாண்டிய சமயம வீட்டிற்குச் சென்று, அவரை அழைத்து, வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் திருமணமாகி ஒரு பிள்ளையின் தந்தையும் ஆவார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் நேரில் சென்று பார்வையிட்டு சடலத்தை மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்து உடல் கூற்றுப் பரிசோதனை அறிக்கையை பெற்று நீதிமன்றிற்கு சமர்ப்பிக்க உத்தரவிட்டார்.

## மாதகலில் காணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைவிடப்பட்டுள்ளது.

மாதகல் ஜே / 150 கிராம சேவையாளர் பிரிவில் தனியார் காணிகளில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் , அக்காணிகளை சுவீகரிப்பதற்கான அளவீட்டு வேலைகளை இன்று புதன் கிழமை முன்னெடுக்க முயன்றனர்.

காணிகளை அளவீடு செய்வதற்காக நிலஅளவைத் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் வருகை தந்த போது காணி உரிமையாளர்கள், அப்பகுதி மக்கள் மற்றும் அரசியல் கட்சி சார்ந்தவர்கள் கடும் எதிர்ப்பினை தெரிவித்ததை அடுத்து , காணி அளவீட்டுப்பணிக்கு வந்தவர்கள் திரும்பி சென்றனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உதவிக்கு வரும் தொற்றுப்பரவல்

**கொரோனா வைரஸை நம்பி ஆட்சி அதிகாரத்தைத் தொடர வேண்டிய கட்டாயம் கோட்டாபய அரசுக்கு.**

**உச்ச செல்வாக்கு, பேராதரவோடு ஆட்சிக்கட்டுக்கு மீண்டு வந்த ராஜபக்ஷக்கள் வந்த வேகத்தில் செல்வாக்கையும் மக்கள் அபிமானத்தையும் இழந்து, துப்புக்கெட்ட நிலைமைக்கு வந்திருப்பதுதான் இப்போதைய கட்டம்.**

**இந்தப் போக்கு போகப் போக மிக மோசமாகும் என்பது போலவே தோற்றுகின்றது.**

**ரூபாவின் பெறுமதி செல்லாக்காசாகி வருகின்றது. பணவீக்கம் மோசமான நிலைமையை நோக்கி ஊதிப் பெருக்கின்றது. விலைவாசி முன்னெப்போதும் இல்லாதவாறு நாளொரு பெறுமதி பொழுதொரு விலை என்று எகிறுகின்றது.**

**இவற்றினால் இந்த அரசின் மீது தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்கள் வைத்திருந்த நம்பிக்கை தினசரி சரிந்து வருகின்றது. அதிலும் விட தகர்ந்து வருகின்றது எனக் குறிப்பிடுவதுதான் பொருத்தமானதாக இருக்கும்.**

**இந்த ஆட்சிப்பீடத்தை விரைந்து துரத்தியடித்தால்தான் தாங்கள் தப்பிப்பிழைத்து உயிர் வாழலாம் என்று மக்கள் எண்ணும் அளவுக்கு நிலைமை சென்று கொண்டிருக்கின்றது. அதனால் இனி அடிக்கடி இலங்கை நாடுமுழுவதும் இத்தகைய மக்கள் எழுச்சி – அரச எதிர்ப்பு – போராட்டங்களை நாம் காண முடியும்.**

**கிராம மக்களின் – விவசாயிகளின் – தொழிற்சங்கத்தினரின் – மனவுணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் அண்மைக்காலத்தில் ஆங்காங்கே அரச எதிர்ப்பு போராட்டங்கள் வெடிக்கத்தொடங்கின.**

**அவற்றின் உச்சக் கட்டத் திருவிழாவை நேற்று தலைநகர் கொழும்பில் பார்த்தோம்.**

**அரசின் தடை நடவடிக்கைகள், நீதிமன்றங்களின் தடுப்பு உத்தரவுகள், பொலிஸாரின் வழிமறிப்புத் தடைகள், கெடுபிடிகள் ஆகியவற்றையும், சுகாதார திணைக்களத்தினரால் விடுக்கப்பட்ட கொரோனா தடுப்பு எச்சரிக்கை விதிகளையும் புறம்தள்ளி மக்கள் நேற்று வெகுண்டெழுந்திருக்கின்றார்கள்.**

**மக்களின் இந்த மனவுணர்வை ஆட்சியாளர்கள் நிச்சயம் புரிந்து – உணர்ந்து – கொண்டிருப்பார்கள்.**

**அரசுக்கும் ஆட்சிப்பீடத்திற்கும் எதிராக தொடர்ந்து வெடிக்கப்போகின்ற அரச எதிர்ப்பு பேரணிகளையும் எழுச்சிகளையும் இப்போதைக்கு நேரடியாக முகங்கொடுக்காமல் சமாளிப்பதற்கு– அல்லது தடுப்பதற்கு – கொரோனத் தொற்று தடுப்பு விதிகள் என்ற சுகாதாரத் தரப்பின் கட்டளைகள் மட்டுமே அரசுக்கு உதவ முடியும்.**

**போதாக்குறைக்கு இது கார்த்திகை மாதம். தமது வீர மறவர்களுக்கு தமிழர்கள் விளக்கேற்றி, பூஜித்து அஞ்சலிக்கும் காலமும் கூட. அதையும் தடை செய்வதற்கு வழமை போல பௌத்த, சிங்கள பேரினவாதம் சுகாதார விதிமுறைகளைக் கையில் எடுத்துக்கொண்டு நீதிமன்றத்துக்குத்தான் அலையும். அந்த விடயத்துக்காகப் பொலிஸ் தரப்பு இப்போதே தயாராகிவிட்டது என்று களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**இனியென்ன? நாளொரு தடை உத்தரவுக் கோரிக்கை, பொழுதொரு பொய்வழக்கு என்று பொலிஸ் தரப்பு நீதி மன்றத்துக்கு அலைய வேண்டியதுதான்.**

**மக்களின் எழுச்சிக்கு முகம்கொடுக்க முடியாத ராஜபக்ஷக்களின் திமிர்பிடித்த அரசு, தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இனிமேல் கொவிட் தொற்றுத் தடுப்பு விதிகளில் தங்கியிருக்க வேண்டியதுதான்.**

# விடுதலைப் புலிகளின் தலைவர் மீண்டும் இங்கு வரப்போகிறாரா?

## மன்றில் ஆவேசப்பட்ட நளின் பண்டார



அதிகளவான சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும், அதனால் நான் பாதிக்கப்பட்டேன் எனவும், நாடாளுமன்றத்தில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படப்போகிறதா? அல்லது பிரபாகரன் மீண்டும் வரப்போகிறாரா? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.

நான் பிங்கியவில் இருந்து நாடாளுமன்றத்துக்கு வரும்போது 21 இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன எனவும் அதில் 10 சாவடிகளில் தமது வாகனம் சோதனையிடப்பட்டதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

இதன்காரணமாக ஏற்பட்ட தாமதம் காரணமாக தம்மால் வாய்மூல கேள்வியை தொடுக்க முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே தமக்கு வாய்மொழி கேள்விக்கு வாய்ப்பு பெற்றுத்தரவேண்டும் என்று அவர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இது நாடாளுமன்ற வரப்பிரசாதத்தை மீறும் செயல் என்றும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் நளின் பண்டார கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படப்போகிறதா? அல்லது பிரபாகரன் மீண்டும் வரப்போகிறாரா? ஏன் அமைச்சர் சரத் வீரசேகர இத்தனை சோதனைச் சாவடிகளை அமைக்கவேண்டும் என்று அவர் சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை வாய்மூல கேள்வித் தொடர்பில் அரசாங்கக் கட்சிக்கு வழங்கப்படும் வரப்பிரசாதம், எதிர்க்கட்சிக்கு வழங்கப்படுவதில்லை என்று எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டினர்.

எனினும் இதனை சபாநாயகர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# வவுனியா நகரசபையின் பாதீடும் நிறைவேற்றம்

வவுனியா நகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வவுனியா நகரசபை அமர்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 09.30 மணிக்கு வவுனியா நகரசபையில் இடம்பெற்றது.

இதன்போது 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நகரசபை தலைவர் இ.கௌதமன் முன்வைத்திருந்தார். இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் தனுஸ்காந் எதிர்த்து வாக்களித்த நிலையில் ஏனைய 18 உறுப்பினர்களின் ஆதரவுடன் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதன் போது 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நகரசபை உறுப்பினர் எம்.லரீப் முன்மொழிய, உபதலைவர் குமாரசாமி வழி மொழிந்திருந்தார்.

இந்தப் பாதீட்டில் 10 வட்டாரங்களுக்கு தலா 35 லட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டதுடன், வட்டார பராமரிப்பு, வருமான மேம்பாடு, திண்மக்கழிவு முகாமைத்துவம், பொது விடயங்கள் உள்ளடங்களாக 86 லட்சத்து 32 ஆயிரம் ரூபாவைக் கொண்டமைந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சுதந்திரக் கட்சியின் நகரசபை உறுப்பினர் திருமதி த.புஞ்சிகுமாரி மரணமடைந்தமையைத் தொடர்ந்து அவருக்கு பதிலாக பிறிதொரு உறுப்பினர் தெரிவு செய்யப்படாத நிலையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது

# திருமண நிகழ்வுகளுக்கு மதுபானம் விற்கத் தடை

## மீறினால் சட்ட நடவடிக்கை

புதிய சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய திருமண வைபவங்களை நடத்தும் தினத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மதுபானங்களை விற்பனை செய்யும் மதுபான விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என மதுவரி திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் ஆணையாளருமான கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள புதிய சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய நவம்பர் 16 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை திருமண வைபவங்களுக்கு மதுபானங்களை விநியோகிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. திருமண வைபவங்கள் நடைபெறும் இடத்தில் மதுபானத்தைப் பயன்படுத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் பொலிஸ் அதிகாரிகளுக்கே இருப்பதாக கபில குமாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரஷ்யா - மேற்கத்திய நாடுகள் இடையே போர் மூளக்கூடும்

## பிரித்தானியா எச்சரிக்கை



ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே எதிர்பாராத வகையில் போர் மூளக்கூடும் என்று பிரித்தானிய இராணுவ தலைமைத் தளபதி நிக் கார்ட்டர் எச்சரித்துள்ளார். ‘டைம்ஸ்’ வானொலிக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

ஒருவருக்கொருவர் மோதுவதையே குணமாகக் கொண்ட அரசியல்வாதிகள் எடுக்கும் முடிவுகளால், எதிரி நாடுகளுடனான பதற்றம் அதிகரிக்கவும் அந்தப் பதற்றம் தவறான கணக்கீடுகளை உருவாக்கவும் நாம் அனுமதிக்கக் கூடாது.

சர்வாதிகாரப் போக்கைக் கொண்ட எதிரி நாடுகளின் தலைவர்கள், தங்கள் வெற்றிக்காக அகதிகள் பிரச்சினை, எண்ணெய் விலையேற்றம், மறைமுகப் போர், இணையம் மூலம் தாக்குதல் போன்ற எதனையும் ஆயுதமாகப் பயன்படுத்துவார்கள்.

பனிப் போர் காலத்தில் அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் என்ற இருமுனைப் போர்ச் சூழல் நிலவியது. அதற்குப் பிறகு, அமெரிக்காவின் ஒருமுனை ஆதிக்கம் நிலவியது. ஆனால், தற்போது பல்வேறு நாடுகளும் தத்தமது நலன்களுக்காக களத்தில் இருப்பதால் குழப்பம் நிறைந்த பல்முனைப் போரை உலகம் எதிர் கொண்டுள்ளது.

அத்தகைய போரை தூதரக ரீதியில் தடுத்து நிறுத்துவதற்கான உத்திகள் போதிய அளவில் இல்லை. இதனால், ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்தால், அது இரு தரப்பினருக்கும் இடையே தவறான புரிதல்களை ஏற்படுத்தி போரை உருவாக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் என கூறினார்.

# ஜப்பானிய முன்னாள் இளவரசி நியூயோர்க் வருகை



அரச குடும்ப அந்தஸ்தைத் துறந்து தன் காதல் கணவருடன் நியூயோர்க் சென்றடைந்தார் ஜப்பானின் முன்னாள் இளவரசி மகோ.

கடந்த மாதம் பெரிய ஆரவாரமின்றி தன் நீண்ட நாள் காதலரை மணந்து கொண்ட இளவரசி மகோ, ஞாயிற்றுக் கிழமை காலை டோக்கியோ விமான நிலையத்தில் அமெரிக்காவுக்கு விமானம் ஏறினார்.

டோக்கியோ விமான நிலையத்தில் கிட்டத்தட்ட 100 பத்திரிகையாளர்களைக் கடந்த மகோ மற்றும் கொமுரு ஒரு பத்திரிகையாளருக்கு கூட பதிலளிக்கவில்லை. அவர்கள் இருவருக்கும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் ஒரு சட்ட நிறுவனத்தில் பணியாற்றும் கெய் கொமுரு மற்றும் மகோ, நியூயோர்க் நகரில் ஒரு அடுக்கு மாடி குடியிருப்பை வாடகைக்கு எடுக்க உள்ளனர். மேலும் மகோ நியூயோர்க்கில் ஒரு புதிய வேலையைக் கண்டுபிடித்து சேர இருக்கிறார் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.


மகோ மற்றும் கெய் கொமுருவின் திருமண பேச்சுக்கள் எல்லாம் ஒருபுறமிருக்க, கொமுரு நியூயோர்க் மாகாண பார் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை எனவும் செய்திகள் வெளியாகின. நியூயோர்க்கில் வழக்குரைஞர்கள் தங்கள் பணி களைத் தொடர இத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

தற்போது கொமுரு ஒரு சட்ட எழுத்தளராக பணியாற்றி வருகிறார். கொமுரு மற் றும் மகோ அமெரிக்காவுக்கு குடியேறுவதை, பிரிட்டனின் ஹாரி மற்றும் மேகன் மார்க்கல் குடியேறியதோடு பலரும் ஒப்பிடுகிறார்கள். மகோ மற்றும் கொமுரு ஜப்பானின் மேகன் மற்றும் ஹாரி என அழைக்கப்படுகின்றனர்.

அவர்கள் இருவரும் கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி திருமணம் செய்து கொண்டனர் என ஜப்பானின் அரச குடும்ப விவகாரங்கள் முகமை (இம்பீரியல் ஹவுஸ்ஹோல்ட் ஏஜென்சி) கூறியுள்ளது.

மகோ மற்றும் கெய் கொமுரு மீது அபரிவித ஊடக வெளிச்சம் பட்டதால், இளவரசி மகோ மன அழுத்தத்துக்கு ஆளானார் என ஜப்பானின் அரச குடும்ப விவகார முகமை கூறியுள்ளதாக, ஜப்பானின் க்யோடோ செய்தி முகமை குறிப்பிட்டுள்ளது.

# அன்பு பரிமாற்றத்துடன் நிறைவுபெற்றது சீனா – அமெரிக்கா இடையிலான பேச்சு



மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் ஆகியோருக்கிடையிலான பேச்சு அன்பு பரிமாற்றத்துடன் நிறைவுப் பெற்றுள்ளது.

இருநாட்டு தலைவர்களுக்கான முதல் நேருக்கு நேர் மெய்நிகர் உச்சி மாநாடு நேற்று மாலை இரவு 8 மணி யளவில் நடைபெற்றது. தாய்வான் விவகாரம், வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் போன்றவிவகாரங்களில் உலகின் இரண்டு பெரிய பொருளாதாரங்களுக்கு இடையே பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்த சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்பட்டது.

இதன்போது, இருவரும் ஒருவரையொருவர் அன்புடன் வரவேற்றனர். சீன ஜனாதிபதி ஸி, தனது பழைய நண்பர் பைடனைப் பார்த்ததில் மகிழ்ச்சி அடைகிறேன் எனக் கூறினார்.

இரு நாடுகளும் தங்கள் போட்டி வெளிப்படையான மோதலில் மாறாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு இருப்பதாக பைடன் கூறினார்.

நயாங்கள் ஒருவருக்கொருவர் பேசுவதற்கு நிறைய நேரம் செலவிட்டோம். எப்பொழுதும் ஒருவருக்கொருவர் மிகவும் நேர்மையாக தொடர்பு கொண்டோம். மற்றவர் என்ன நினைக்கிறார் என்று நாங்கள் ஒருபோதும் ஆச்சரியப்பட மாட்டோம் என்று அவர் மேலும் கூறினார்.

பைடன் ஜனவரி மாதம் பதவியேற்றதிலிருந்து இரு தலைவர்களும் நடத்திய மிக முக்கியமான பேச்சு இதுவாகும். இரு நாடுகளும் தொடர்பு களை மேம்படுத்த வேண்டும் மற்றும் ஒன்றாக சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் கூறினார். காலநிலை மாற்றம் மற்றும் கொவிட்-19 போன்ற உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள ஆரோக்கியமான சீனா- அமெரிக்க உறவுகள் தேவை என்றும் அவர் கூறினார்,

சீனாவும் அமெரிக்காவும் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும். சீனா-அமெரிக்க உறவு களை நேர்மறையான திசையில் முன்னோக்கி நகர்த்துவதற்கு, உங்களுடன் இணைந்து பணியாற்ற நான் தயாராக இருக்கிறேன் என கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# எல்லைப் பாதுகாப்பு படையின் அதிகார வரம்பு நீடிப்பதற்கு எதிராக மேற்கு வங்கத்தில் தீர்மானம்

இந்தியாவில் மேற்கு வங்க மாநிலத்தின் சர்வதேச எல்லையில் இருந்து 50 கி.மீ. வரை எல்லைப் பாதுகாப்புப் படையின் அதிகார வரம்பை நீடிக்கும் மத்திய அரசின் நடவடிக்கைக்கு எதிராக மேற்கு வங்க சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் நாடுகளுடனான இந்தியாவை ஒட்டிய சர்வதேச எல்லையில் இருந்து இந்திய எல்லைக்குள் 50 கிலோமீற்றர் வரை சோதனை நடத்தவும், சந்தேக நபர்களைக் கைது செய்யவும், பறிமுதல் செய்யவும் எல்லைப் பாதுகாப்புப்படைக்கு மத்திய அரசு ஒக்ரோபர் மாதத் தொடக்கத்தில் அதிகாரம் அளித்திருந்தது.

பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் எல்லைப் பாதுகாப்புப் படையின் அதிகார வரம்பை நீடிக்கும் மத்திய அரசின் முடிவுக்கு எதிராக மேற்கு வங்க சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியது.

பஞ்சாபிற்கு அடுத்தபடியாக இத்தகைய தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட இரண்டாவது மாநிலமாக மேற்கு வங்கம் மாறியிருக்கிறது.

# இறந்துவிடுவோம் என்று தெரிந்தும் மக்கள் ஏன் மது குடிக்கிறார்கள் என நிதிஷ்குமார் கேள்வி



இறந்துவிடுவோம் எனத் தெரிந்தும் மக்கள் ஏன் மது குடிக்கிறார்கள் என்பது புரியவில்லை, என பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் தெரிவித்திருக்கிறார்.

நேற்று செவ்வாய்க்கிழமை திட்டமிடப்பட்ட பீகார் மாநிலத்தின் மதுவிலக்குக் கொள்கை குறித்த மதிப்பீட்டுக் கூட்டத்திற்கு முன்னதாக நடந்த 'ஜனதா தர்பார்' நிகழ்ச்சிக்குப் பிறகு செய்தியாளர்களோடு உரையாடிய நிதிஷ்குமார், மதுவை அருந்தினால் மக்கள் இறந்துவிடுவார்கள். இது ஒரு மோசமான பொருள். ஆனால், இது தெரிந்தும் மக்கள் ஏன் மது அருந்துகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. மாநிலத்தில் மது விலக்குத் தொடர்பான விடயத்தை சிலர் தனக்கு எதிராகத் திருப்பியுள்ளனர் என்று கூறினார்.

மதுவிலக்கு அனைவரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை மறந்துவிட்டார்களா?. அப்போது ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, இதற்கு எந்தக் கட்சியும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறதா? என்று அவர் கேள்வியெழுப்பினார்.

மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அந்தந்த அதிகார வரம்பில் போதிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளோம். சட்டவிரோத மதுபான வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள், என்று அவர் தெரிவித்தார்.

பீகாரில் கடந்த சில வாரங்களாக கள்ளச் சாராயம் குடித்து நாற்பதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமையையடுத்து நிதிஷ்குமாரை எதிர்க்கட்சிகள் கடுமையாகக் குற்றஞ்சாட்டிவருகின்றன. 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எதிர்க்கட்சித் தலைவர்களின் ஒப்புதலுடன் பீகார் மாநிலத்தில் மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடத்




# இரவு நேரத்திலும் பிரேத பரிசோதனை செய்வதற்கு மத்திய அரசு அனுமதி

போதிய உள்கட்டமைப்பு வசதிகள் உள்ள மருத்துவமனைகளில் இரவு நேரத்திலும் பிரேதப் பரிசோதனை நடத்த இந்திய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பினை வெளியிட்டுள்ள இந்திய மத்திய சுகாதார அமைச்சகம், சட்டம்-ஒழுங்குசீர்குலைந்தால் தவிர, தற்கொலை மற்றும் பாலியல் வன்கொடுமை போன்ற வழக்குகளை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தக்கூடாது என்றும் கூறியுள்ளது. இந்தப் புதிய நடைமுறைகள் மூலமாக உறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை ஊக்குவிக்கப்படும் என இந்திய மத்திய அரசு தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள டுவீட்டில், பகலில் மட்டுமே பிரேதப் பரிசோதனை செய்யலாம் என்று ஆங்கிலேயர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்திருக்கிறார்.



# தமிழகத்தில் ஒருவருக்கு பன்றிக்காய்ச்சல் இரத்தப்பரிசோதனையில் உறுதியானது

தமிழகத்தின் திருப்பூர் மாநகர், வேலம்பாளையம் பகுதியைச் சேர்ந்த 44 வயது ஆண் ஒருவருக்கு நேற்று பன்றிக் காய்ச்சல் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக அந்த நபர் சளி, காய்ச்சல், தொண்டை வலி, மூச்சுத் திணறல் போன்ற பல்வேறு பிரச்சினைகளால் அவதிப்பட்டு வந்துள்ளார். இதன்காரணமாக இரு தினங்களுக்கு முன்பாக கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்குச் சென்று இரத்தப் பரிசோதனை செய்துள்ளார்.

பரிசோதனையின் முடிவில் அவருக்குப் பன்றிக் காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது . தற்பொழுது அந்த நபர் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.




# தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் மழைப் பாதிப்பு குறித்து ஆலோசனை

தமிழக அமைச்சரவைக் கூட்டம் நாளை மறுதினம் 19 ஆம் திகதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக்கூட்டத்தில் அமைச்சர்களுடன் பிரதானமாக மழை, வெள்ளப் பாதிப்புகள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளன எனவும் தெரியவருகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இனவாதத்தையும் மதவாதத்தையும் மூலதனமாக வைத்து நீண்டகாலம் ஆட்சி செய்ய முடியாது

## ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

இனவாதத்தையும் மதவாதத்தையும் மூலதனமாக வைத்துக்கொண்டு நீண்ட காலம் ஆட்சி செய்ய முடியாது என மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

இன்று நாட்டு மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். நீங்கள் உங்கள் தொகுதிகளுக்கு சென்று அந்த மக்களுடன் உரையாடினீர்கள் என்றால் விவசாயிகள் படுகின்ற வேதனைகள் புரியும். அரசாங்கத்தை உருவாக்கிய விவசாயிகள் கூட தங்களது எதிர்காலம் பூச்சியமாகிவிடும் என்ற அச்சத்தில் காலம் கடத்துகின்றார்கள். அவர்களின் அன்றாடத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாமல் தவிக்கின்றனர். இன்று பாதையில் நிற்கும் அத்தனை பேரும் அரசுக்கு எதிரானவர்கள் அல்ல. அரசுக்கு ஆதரவாக வாக்களித்தவர்களில் பெரும்பாலானோர், எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களின் தேவைப்பாட்டை நிறைவேற்றக் கூடிய வகையில், உங்கள் உள்ளத்தில் மாற்றம் வர வேண்டும்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் பாதுகாப்பு விடயத்துக்காக நிதி அதிகம் ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு என்று கூறும் போது, வெறுமனே ஆயுத ரீதியானது மட்டுமன்றி ஒரு மனிதனின் உணவு, வறுமையை நீக்குதல், இருப்பிட வசதி, சுகாதார வசதி, கல்வி மற்றும் இன்னோரன்ன விடயங்களை வழங்குவதும் கூட பாதுகாப்புடன் தொடர்பு பட்டதே. எனவே, அந்த விடயத்துக்கு இந்த வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடுகள் போதாமையாக உள்ளன.

எனவே, இவ்வாறான நிலையிலே



இனவாதத்தை கிளறி, நாட்டைக் குட்டிச்சுவராக்காதீர்கள். சட்டத்தை எல்லோருக்கும் சமமாகப் பிரயோகியுங்கள். அப்போதுதான் நாடு முன்னேற்றமடையும். வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கும். கடந்த காலங்களில் மலேசியா, அபுதாபி போன்றவை பாரிய முதலீடுகளை செய்தன. நான் அமைச்சராக இருந்த போது, கட்டார் 100 கோடி ரூபா முதலீடு செய்ய தயாரானது. ஓமான் மற்றும் பல இஸ்லாமிய நாடுகள் இவ்வாறு தயாராக இருந்தன. அந்த நாடுகளைப் பொறுத்தவரையில் இந்த நாட்டிலே வேறு எந்த எண்ணத்தையும் அதாவது, வளங்களை சூறையாட வேண்டும் என்ற கபட நோக்கம் இருந்ததில்லை.

இந்த நாட்டில் சமாதானம், அபிவிருத்தி ஆகியவற்றை மட்டுமே சிந்திக்கின்ற இஸ்லாமிய நாடுகள் கூட, ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணியின் தலைவராக முஸ்லிம்களின் இறைவனை நிந்தித்த ஒருவரை ஏற்றுக்கொள்வார்களா? எனவே, இவற்றை எல்லாம் நீங்கள் ஆழமாக சிந்திக்க வேண்டும். இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு நீண்டகாலம் அரசியல் செய்ய முடியாது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ளுங்கள் என்று மேலும் தெரிவித்தார்.

# மாவடிப்பள்ளி விபத்தில் இளைஞர் ஒருவர் சாவு

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைதீவு பிரதேச மாவடிப்பள்ளி பிரதான வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் வண்டு வீதி உடங்கா 2 சம்மாந்துறையைச் சேர்ந்த அஸ்ரப் முஹம்மது முனாஸ் (வயது 31) சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.



வெளிநாடொன்றில் பணி புரிந்துவிட்டு அண்மையில் நாடு திரும்பியிருந்த இவரின் மரணம் சம்மாந்துறை மக்களிடையே கவலையை உருவாக்கியுள்ளது. நேற்று மாலை அஸ்ரப் முஹம்மது முனாஸ் வேலை நிமித்தம் சென்று கொண்டிருந்த போதே மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன் வாகனத்தை செலுத்தியவர்களின் கவனயீனமே விபத்திற்கான காரணமாக உள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இவரின் சடலம் சம்மாந்துறை ஆதாரவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலை மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளர் காலமானார்

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேசத்தின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எம்.ஏ. அப்துல் பரீட் ஆசிரியர் நேற்று திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி காலமானார்.

இவர் தினகரன் பத்திரிகையின் திருகோணமலை மாவட்ட விசேட நிருபரும் தமிழ் மிரர் பத்திரிக்கையின் பிராந்திய செய்தியாளரும் ஆவார். திருகோணமலை பொது வைத்தியசாலையில் சுகயீனம் காரண மாக சிகிச்சை பெற்று வந்திருந்த நிலையில் நேற்று நண்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் .

இவரின் பூதவுடல், கிண்ணியா ரஹ்மானியா பொது மையவாடியில் நேற்று இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது கிண் ணியா நடுப்பள்ளி வீதியைச் சேர்ந்த ஏ.எம்.ஏ. அப்துல் பரீட் தனது 63வது வயதில் காலமானார்.

# தளவாய் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தளவாய் பகுதியில் சட்ட விரோத மண் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தளவாயில் உள்ள மக்கள் நடமாட்டம் குறைவான பகுதியில் உள்ள காணியொன்றில் பெருமளவு மண் அகழப்பட்டு மலைபோல் குவித்து வைக்கப்பட்டுள்ளது.

காணியொன்றில் பாரியளவில் முன்னெடுக்கப்படும் இந்த மண் அகழ்வு குறித்து எந்தவிதத் தகவலும் இல்லையெனவும் கனரக வாகனங்களைக் கொண்டு சிலர் குறித்த பகுதியில் இந்த செயற்பாட்டை முன்னெடுக்கின்றனர் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை பகுதியில் முன்னெடுக்கப்படும் மண் அகழ்வுகள் குறித்து தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினரும் போராடிவரும் நிலையில் எழுவான்கரை பகுதியில் தனியார் காணிகளில் மண் அகழ்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.



மண் விற்பனையை நோக்காக கொண்டே குறித்த பகுதியில் இவ்வாறான மண் அகழ்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என பிரதேச மக்கள் தெரிவிக் கின்றனர். தனியார் காணிகளில் மண் அகழ் வுகள் முன்னெடுப்பதனாலும் அதற்கான அனுமதிகள் பெறவேண்டிய நிலையுள்ள போது யார் இதற்கான அனுமதியை வழங்கினார் எனவும் அப்பகுதி மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

குறித்த மண் அகழ்வு இடம்பெறும் காணிக்கு அருகில் கிழக்கின் அரசியல் கட்சியின் முக்கியஸ்தரின் காணியும் உள்ள நிலையில் இந்த மண் அகழ்வு குறித்து அப்பகுதி மக்கள் பல்வேறு சந்தேகங்களை எழுப்பிவருகின்றனர்.

# இந்தியா – நியூசிலாந்து முதலாவது ரி–20 போட்டி இன்று



நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று ரி-20, மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கு-மிடை யிலான 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது போட்டி ராஜஸ்தான் மாநில தலைநகர் ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான்சிங் மைதானத்தில் இன்று நடைபெறுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வி கண்ட நியூசிலாந்து அணி அங்கிருந்து பயோ பபிள் பாதுகாப்பு நடைமுறைகளோடு ஜெய்ப்பூருக்குச் சென்றுள்ளது கேன் வில்லியம்சன் டெஸ்ட் தொடருக்குத் தயாராவதற்கு ஓய்வு எடுத்துக்கொண்டிருப்பதால், டிம் சௌத்தி நியூசிலாந்து அணிக்குத் தலைமை தாங்குகினார்.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதிக்கு முன்னேறாமல் வெளியேறிய இந்திய அணி பல மாற்றங்களோடு களமிறங்குகிறது. ரி-20 உலகக் கிண்ணத் தொடருடன் விராட்கோலி, ரி-20 அணித்தலைவர் பதவியிலிருந்து விலகிவிட்டதால் ரோகித் சர்மா இந்திய அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல பயிற்சியாளராகவிருந்த ரவி சாஸ்திரியின் பதவிக் காலமும் நிறைவுபெற்றதால், அவருடைய இடத்தில் ராகுல் ட்ராவிட் பொறுப்பேற்றுள்ளார்.

இவ்விரு அணிகளும் இதுவரை 17 முறை ரி-20 போட்டிகளில் ஒன்றையொன்று எதிர்கொண்டுள்ளன. அவற்றில், இந்திய அணி 6 இலும் நியூசிலாந்து அணி 9 இலும் வென்றுள்ளன.

இன்று நடைபெறும் போட்டியை மைதானத்திற்குச் சென்று நேரில் காண ரசிகர்களுக்கு கொரோனா தடுப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. 8 ஆண்டுகளுக்குப் பின்னர் ஜெய்ப்பூரில் சர்வதேச கிரிக்கெட் போட்டியொன்று நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போர்முலா வன் கார் பந்தயத் தொடர் லூயிஸ் ஹமில்டனுக்கு வெற்றி




இந்த ஆண்டுக்கான போர்முலா- வன் கார்பந்தயத் தொடர் 22 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 19 ஆவது சுற்றான பிரேசிலியன் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயம் ஜோஸ் கார்லோஸ் பேஸ் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

305.909 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்தப் பந்தயத்தில் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதில் மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன் பந்தயத் தூரத்தை ஒரு மணித்தியாலம் 32 நிமிடங்கள் 22.851 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இதற்காக அவருக்கு 25 புள்ளிகள் வழங்கப்பட்டன. அவரை விட 10.496 வினாடிகள் பின் தங்கிய ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் இரண்டாவது இடத்தையும் 18 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டார். 13.576 வினாடிகள் பின்தங்கிய நிலையில் பந்தயத் தூரத்தைக் கடந்த மெர்சிடஸ் பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வோல்டெரி போட்டஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்தார். அதற்கு அவருக்கு 15 புள்ளிகள் கிடைத்தன.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 19 சுற்றுகளின் முடிவில் ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் ஒன்பது வெற்றிகள், 332.5 புள்ளிகளுடன் முதலாவது இடத்தில் உள்ளார். மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன் ஆறு வெற்றிகள், 318.5 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் இருக்கிறார். மெர்சிடஸ் பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வோல்டெரி போட்டஸ், ஒரு வெற்றியுடனும் 203 புள்ளிகளுடனும் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

அடுத்த சுற்றான கட்டார் கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 21ஆம் திகதி லோசைல் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

## பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை இறுதிப் போட்டிக்குள்ளும் நுழைந்தது

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதி லீக் போட்டியில் பங்களாதேஷ் அணியை 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிகொண்ட இலங்கை அணி தொடரின் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் இலங்கை அணி இந்த தொடரின் இறுதிப் போட்டியில் சீசெல்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் அரங்கில் இடம்பெற்ற போட்டி இரண்டு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.



ஏற்கனவே, ஒரு தோல்வி மற்றும் ஒரு சமநிலையான முடிவைப் பெற்றிருந்த இலங்கை அணிக்கு இறுதிப் போட்டிக்குச் செல்ல இந்தப் போட்டியில் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயமிருந்தது. பங்களாதேஷ் அணி இறுதிப் போட்டிக்குள் நுழைவதற்கு இந்தப் போட்டியில் சமநிலை முடிவு மட்டுமே போதுமானதாக இருந்தது.

போட்டியின் 25ஆவது நிமிடத்தில் வசீம் ராசிக் கோலொன்றையடித்து இலங்கை அணியை முன்னிலைப்படுத்தினார். ஆட்டத்தின் முதல்பாதியில் இலங்கையணி 1-0என்றுமுன்னிலையிலிருந்தது. போட்டி யின் 71ஆவது நிமிடத்தில் பங்களாதேஷ் அணியின் ஜுவெல் ரனா அடித்த கோல், போட்டியைச் சமநிலைக்குக் கொண்டுவந்து இலங்கையணிக்கு அழுத்தத்தைக் கொடுத்தது. போட்டியின் 90 ஆவது நிமிடத்தில் இலங்கைக்கு கிடைத்த பெனால்டிக்கான வாய்ப்பை வசீம் ராசிக் கோலாக்கி, இலங்கை அணியை 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியடையச் செய்தார்.

தொடரின் லீக் போட்டிகள் நிறைவில் 3 போட்டிகளில் ஒரு வெற்றி, ஒரு சமநிலை மற்றும் ஒரு தோல்வியை சந்தித்த இலங்கை அணி 4 புள்ளிகளுடன் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. பங்களாதேஷ் அணியும் இலங்கையைப் போன்ற முடிவுகளுடன் 4 புள்ளிகளைப் பெற்றாலும், இலங்கையுடன் தோல்வியைச் சந்தித்தமையினால், போட்டித் தொடரின் விதிமுறைகளுக்கு அமைய தொடரில் இருந்து வெளியேறியது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொவிட் மரணங்களை அதிகரிப்பதே எதிர்க்கட்சியினரின் நோக்கம் ஆகும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு



மக்களை வீதியில் இறக்கி கொவிட் தொற்று நோயை பரப்பி, மரணங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, மீண்டும் நாட்டை மூட வைப்பதே அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க்கட்சி நடத்தும் ஆர்ப்பாட்டத்தின் உண்மையான நோக்கம் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்று நோயை அதிகரிப்பதன் மூலம் எதிர்க் கட்சி குரூர மகிழ்ச்சியடைவதாகவும் அவர் கூறியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பொருளாதாரத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்ட நாட்டையே எமக்கு கடந்த நல்லாட்சி அரசாங்கம் கையளித்தது. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எமக்கு நினைவிருக்கின்றது.

எனினும் 1977 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தி, நாட்டு மக்களுக்கு சோசேஜ் ஊட்டி, சீஸ், பட்டரை ஊட்டி, தேசிய உற்பத்திகளை அழித்தார்.

கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், நாட்டின் தேசிய உற்பத்தி செயற்பாடுகளை வலுப்படுத்தியது. 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம், அதனை முற்றாக அழித்தது. மத்திய வங்கி பட்டப்பகலில் கொள்ளையிடப்பட்டு, பொருளாதாரம் அழிக்கப்பட்ட நாட்டையே நாங்கள் 2019 ஆம் ஆண்டு பொறுப்பேற்றோம்.

மத்திய வங்கியின் இந்தக் கொள்ளையின் பின்னர், அச்சத்திலேயே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகின்றனர். புலிகளின் பயங்கரவாத யுத்தம் போல், 88-89 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பியின் புரட்சியும் இந்த நிலைமைக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர், உலக கொவிட் தொற்று நோயை எதிர்கொள்ள நேரிட்டது. இந்தத் தொற்று நோய் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

நல்லாட்சி அரசாங்கம் தேசிய பொருளாதாரத்தை அழித்தமையும் நாம் எதிர்நோக்கும் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

# கோவிலுக்குச் சென்ற பெண்ணிடம் வட்டுக்கோட்டையில் சங்கிலி அறுப்பு

கோயிலுக்குச் சென்ற குடும்பப்பெண் ஒருவரது தங்கச் சங்கிலியைத் திருடர்கள் இருவர் அறுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) மதியம் 12 மணியளவில் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

சுழிபுரம் பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர் சித்தங்கேணி சிவன் ஆலயத்துக்கு வந்து, சைக்கிளை நிறுத்தும்போது ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் குறித்த குடும்பப் பெண்ணின் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது மூன்றேமுக்கால் பவுண் கொண்ட சங்கிலியில் அரைவாசி திருடனின் கைகளிலும் மிகுதி அந்த பெண்மணியின் கைகளிலும் அகப்பட்டுள்ளது. இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு பங்குச் சந்தை நேற்று வரலாற்று சாதனை

கொழும்பு பங்குச் சந்தை அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் நேற்றும் 11,000 புள்ளிகளைக் கடந்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

அடிப்படையில் கொழும்பு பங்கு சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் நேற்று 11,008.33 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

மேலும், நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் பங்குச் சந்தையின் மொத்த புரள்வு 10.27 பில்லியன்களாக பதிவாகி உள்ளதாகக் கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

## நாம் நாசமாகி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவா தத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க புதிய முறையில் சிந்திப்பது என்பது சர்வ தேச நாணய நிதியத்திடன் செல்வதல்ல. எதிர்க் கட்சியினர் ஆட்சியில் இருந்த காலத்தில் பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றனர். என்.எம் பெரேரா முதலில் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றார் எனவும் கூறினர். இது முழுப்பொய்யாகும்.சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டாம் என்பதையே அவர் கூறினார்.

அவர்களின் முதல் கோரிக்கையே ரூபாவின் பெறுமதியை குறைப்பதாகும், ஆகவே சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வது என்பது சிறைக்கு செல்வதற்கு சமமானது. சிறையில் குறைந்த பட்சம் உணவாவது கிடைக்கும், சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றால் எம்மையே உணவாக்குவார்கள். எனவே இது மிக மோசமான காரணியாகும்.

மிகவும் நெருக்கடியான நிலையிலேயே இந்த வரவு-செலவுத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அரச நிதி நெருக்கடி உள்ள நிலையிலும், டொலர் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையிலும், சர்வதேச சந்தையில் விலை உயர்வு காணப்படுகின்ற நிலையிலும், ஏனைய பல சிக்கல்கள் உள்ள நிலையிலும் நாட்டில் விலைவாசி அதிகரிக்கும்.

இதற்கு எதிர்க்கட்சியிடம் தீர்வு உள்ளதா? எனவே இதனை சிந்தித்து பார்க்க வேண்டும். கஷ்டப்படும் மக்களின் நலன்கள் குறித்தும் இதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது, அதேபோல் சில மோசமான முன்மொழிவுகள் உள்ளன. கொவிட் வைரஸ் தொற்றுகள் இல்லாதிருந்திருந்தால் வேறு விதமாக இந்த வரவு - செலவுத் திட்டம் உருவாகியிருக்கும். இன்று வறுமை, வேலையின்மை அதிகரித்துள்ளது. அவற்றை கருத்தில் கொண்டே இறுக்கமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் வர்க்க வாதத்திற்கு அமையவே இது பாதிப்பை செலுத்தும் என்பதை எம்மால் மட்டுமே உணர முடியும். கஷ்டப்படும் அப்பாவி மக்கள் தொடர்ந்தும் கஷ்டப்பட வேண்டிவரும், பணம் படைத்த மேல் வர்க்கத்தினருக்கு இது பாதிப்பை ஏற்படுத்தாது.

ஆகவே அரசாங்கம் நாசமாகிப் போனாலும் கூட ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று மக்களை நாசமாக்க இடமளிக்க மாட்டோம். அதுவே எமது உறுதியான நிலைப்பாடு - என்றார்.

# வவுனியாவில் நீம் அமைப்பால் 9 பேருக்கு விருது வழங்கல்

**ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம், நவ.17

தேவை கருதிய பொருளாதார மற்றும் சுற்றாடல் அமைப்பான நீம் அமைப்பின் முதலாம் ஆண்டு நிறைவு விழா லண்டன் என்பீல்ட் நாகபூணி அம்மன் ஆலயத்தின் ‘தாய் நிழல்’ அமைப்பாளருமாகிய த.மன் மதராஜா தலைமையில் வவுனியா சுத்தானந்தா இளைஞர் சங்க மண்டபத்தில் நடை பெற்றது.

அந்த அமைப்பின் செயலாளர் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் ஓய்வுநிலை பீடாதிபதி கதிரேசன் சுவர்ணராஜா விழாவுக்கான ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தார்.

விழாவில் வவுனியா பிரதேச செயலாளர் நாகலிங்கம் கமலதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். இந் நிகழ்வில் துறை சார்ந்த முக்கியஸ்தர்களும் விருந்தினர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பொன்னையா மாணிக்கவாசகம் (ஊடகவியலாளர்), தமிழ்மணி அகளங்கன் (இலக்கியம்), தமிழருவி சிவகுமாரன் (ஆன்மீகம்), ஆ. பொன்னையா (பட்டதாரி ஆசிரியர் விருத்தி), திருமதி நாகரத்தினம் தர்மதேவன் (பயிலுநர் ஆசிரியர் விருத்தி), பத்மநாதன் சத்தியநாதன் (மருத்துவம்), தமிழ் விருட்சம் செல்வராசா சந்திரகுமார் (சமூகசேவை), பா.நேசராசா (பசுமை விவசாயி), திருமதி சொக்கலிங்கம் கமலாம்பிகை (சுற்றாடல் நேயம் மற்றும் இறக்கை கல்விசார் தன்னார்வ அமைப்பு)உள்ளிட்ட துறைசார் 9 பேர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், பிள்ளைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

சமூகத்தில் இலைமறைகாயாக நீம் நிறுவனம் 25 லட்சம் ரூபா பெறுமதியான 42 செயற்திட்டங்களைக் கடந்த ஆண்டில் வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நிறைவேற்றி உள்ளது.


கல்வி, நலிவுற்றோருக்கான இடர்கால நிவாரண உதவிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான செயற்கை அவயவங்கள் மற்றும் பாவனை உபகரணங்கள் என்பவற்றை வழங்குதல் உள்ளிட்ட முக்கிய பணிகளே நீம் நிறுவனத்தின் செயற்திட்ட இலக்குகளாகும்.

தொலைதூரத்தில் இருந்து தாயகத்தின் நலிவுற்ற சமூகப் பிரிவினருக்கு அவர்கள் ஆற்றி வருகின்ற தன்னலம் கருதாத சேவைகள் பலருடைய பாராட்டுக்களையும் பெற்றுள்ளன.

இதன் முக்கிய அசைவிக்கச் செயற்பாட்டாளர்களாக அந்த நிறுவனத்தின் தலைவர் நிதர்சன், களப்பணி முக்கிஸ்தராகிய கதிரேசன் சுவர்ணராஜா ஆகியோரும், அந்த அமைப்பின் ஏனைய முக்கியஸ்தர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

பிறக்கவுள்ள புத்தாண்டில் புதுவேகத்துடனான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் நீம் நிறுவனம் திடசங்கற்பம் பூண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் நகரப்பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கை





வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள நிதிநிறுவனங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் சுகாதார அதிகாரிகள், இராணுவம் மற்றும் பொலிஸார் சகிதம் நேற்று (செவ்வாய்க்கிழமை) விசேட சோதனை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர். வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் மீண்டும் அதிகரித்துவரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அந்தவகையில், வவுனியாவில் அமைந்துள்ள வங்கி, மற்றும் வியாபார நிலையங்கள், தனியார் மருத்துவ நிலையங்கள், உணவகங்கள் என்பவற்றில் நேற்றுக் காலை முதல் விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சுகாதார நடைமுறைகளைப் பேணாமை மற்றும் முகக்கவசங்கள் அணியாதவர்களின் விவரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எச்சரிக்கப்பட்டு விடுவிக் கப்பட்டிருந்தனர். வைத்தியர் அரங்கன் மற்றும் பிரசன்னா தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், இராணுவத்தினர், பொலிஸார், பிரதேச செயலக, மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2021இல் வெளியிடப்பெற்றது.